ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No .

දිනය
திகதி
Date. 11.11.2024

திரு. K. புவனேந்திரா
இல. 15 அத்தியடி வீதி
யாழ்ப்பாணம்
கோப்பாய்

(முறைப்பாட்டாளர்)

திரு. விபுலன்
ஆசிரியர்
யா/ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

திரு. சசிதரன்
ஆசிரியர்
யா/ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

அதிபர்
யா/ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

(பிரதிவாதிகள்)

<u>முறைப்பாட்டு இலக்கம் : **HRC-JA-238-2022**</u>

**முறைப்பாடு**

புவனேந்திரா இலக்கியன் வயது - 15 பாடசாலை மாணவன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, முகவரி: இல15, அத்தியடி வீதி, யாழ்ப்பாணம் ஆகிய மாணவன் கடந்த 23.11.2022 மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்ப்பாண காரியாலயத்தில் வைத்து வழங்கிய வாக்கு மூலமாவது. "காலை 10.50 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் விளையாடிக் கொண்டிந்த வேளையில் எனது வகுப்பில் படிக்கும் மாணவனான கிருசன் என்பவர் என்னை விபுலன் சேர் அழைத்து வரச் சொன்னதாக என்னை அழைத்தார். நான் அவருடன் சேர்ந்து எங்களுடைய வகுப்பறையான 10A வகுப்பிற்கு சென்றேன். அங்கு ஆசிரியர் விபுலன், பகுதித்தலைவர் ஆசிரியர் சசிதரன் மற்றும் எனது வகுப்பில் படிக்கும் ஐந்து மாணவர்களும் இருந்தனர். நான் அங்கு சென்ற போது விபுலன் சேர் என்னிடம் நான் யசோதரன் என்னும் எனது



ප්‍රධාන කාර්යාලය / பிரதான அலுவலகம் / Head Office: අංක 14, ආර්. ඒ. ද. මෙල් මාවත කොළඹ -04. / இல. 14, ஆர்.ஏ.த.மெல் மாவத்தை, கொழும்பு -04. / No. 14, R.A.De Mel Mawatha, Colombo -04.
සභාපති / தவிசாளர் / Chairman: 011- 2505451
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011- 2505541/74
ඊමේල් / மின்னஞ்சல் / e-mail: sechrcsl@gmail.com
දුරකථන / தொலைபேசி / Telephone: 94-11-2505580 / 81 /82
ලේකම් / செயலாளர் / Secretary: 011- 2505521
ක්ෂණික / துரித அழைப்பு / Hotline: 1996
වෙබ් / இணையம் / Web: www.hrcsl.lk

நண்பனுக்கு 50 ரூபாய் காசு கொடுத்தாயா? எனக் கேட்டார். நான் ஆம் என்று கூறினேன். அவர் என்னிடம் நீ எப்படி அவனுக்கு 50 ரூபாய் கொடுப்பாய் அவன் பிச்சைக்காரனோ எனக் கேட்டார். கேட்டு விட்டு எனது தலையில் பிடிச்சு அழுத்தி முதுகில் அடித்தார். எனது வகுப்பு மாணவர் ஒருவரிடம் தடி எடுத்து வருமாறு கூறினார். அம் மாணவர் தடி எடுத்து வந்ததன் பின் தடியால் கால் கை என்பவற்றில் 4 தரம் அடித்தார். பின்னர் தடி முறிந்ததும் முறிந்த தடியாலும் அடித்தார். பின்னர் வகுப்பறையில் இருந்து கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு அடித்துக் கொண்டும் வகுப்பறைக்கு வெளியில் கொண்டு சென்றார் வெளியில் வைத்து கையால் தலையில் ஒரு அடி அடித்தார். இவ்வளவும் sectional head சசிதரன் சேர் பார்த்துக் கொண்டிருந்தார். கடிதம் எழுத சொல்லி என்னையும் நான் 50 ரூபா கொடுத்த யசோதரனையும் கடிதம் எழுதச் சொல்லி வைரவர் கோவில் வைத்து பணித்தார். நடந்த சம்பவத்தை எழுத சொன்னார். நான் கடிதம் எழுதினேன். பின்னர் முகவரி போடாமல் எழுதியதாக மறுடியும் ஒரு கடிதம் எழுதச் சொன்னார் நான் எனது கடிதத்தில் நானும் எனது நன்பனும் விளையாடிக் கொண்டிருக்கும் போது எனது நண்பனின் நண்பனான ஒரு அண்ணா டிலோஜன் (11ம் ஆண்டு மாணவன்) எனது நண்பனின பையில் இருந்து 50 ரூபா எடுத்து கொண்டு சென்று விட்டதாகவும் நான் சொல்லியும். அவர் கேட்கவில்லை எனவும் எனது நண்பன் அது bus காசு என கூறியதால் என்னிடம் இருந்த 50 ரூபாவை கொடுத்ததாயும் எழுதினேன். கடிதம் வடிவாக இல்லை என 4 தரம் திருப்பி திருப்பி கடிதம் எழுத கூறினார். யாதவன் என்னும் சக மாணவன் ஆசிரியர் அடிப்பதை அதிபரிடம் நான் கடிதம் எழுதிக் கொண்டிக்கும் போது சென்று கூறியுள்ளார். அதற்கு அதிபர் தான் sectional head விசாரித்து சொல்கிறேன் என்று கூறியுள்ளார். நான் கடிதம் எழுதிக் கொண்டிக்கும் போது அதிபர் அவ்விடத்தால் சென்றார். ஆனால் என்னை எதுவும் கேட்கவில்லை. அதோடு விபுலன் சேர் பயமுறுத்தும் படியாக அம்மா அப்பாவை கூப்பிட்டு அவமரியாதை செய்வேன் எனவும் leaving certificate தருவேன் என வெருட்டினார். அவர் போனதும் sectional head சசிதரன் சேர் இவ்விடயத்தை பெரிது படுத்த வேண்டாம் என கூறினார். வெருட்டிக் கொண்டிருந்தபோது நான் அவருடைய காலில் விழுந்து அழுதேன் வீட்டிற்கு வந்து அப்பா பார்த்து கேட்டதும் நான் விசயத்தை கூறியபோது அப்பா அதிபரிடம் அறிவித்து விட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் 18.11.2022 அன்று பி.ப 3.15. மணியளவில் அனுமதித்தார். நான் வைத்தியசாலையில் இருந்து 19.11.2022 8.45 மணியளவில் விடுவிக்கப்பட்டேன். அடிக்கும் போது பார்த்துக் கொண்டிந்த மாணவர்களின் பெயர்கள் - சோம வித்தியன், யாதவன், கிருஜன், ஆர்த்திகன். யசோதன்.

முதலாம் பிரதிவாதி திரு. விபுலன் (ஆசிரியர்)

கடந்த 18.11.2022 வெள்ளிக்கிழமை பாடசர்லையில் இடைவேளை நேரத்தில் நான் அதிபர் அலுவலகத்தில் இருந்து வெளியே வந்த போது தரம் 10 இன் பகுதித் தலைவரான சசிதரன் என்பவர் 10B யில் படிக்கும் மாணவன் யசோதன் எனும் மாணவனைக் காட்டி, உங்களின் பகுதியில் உள்ள மாணவன் காசைக் களவெடுத்து விட்டார் என்று கூறினார் அப்போது நான்

யசோதரனைக் கேட்டேன், எங்கே களவு எடுத்தது என்று கேட்டேன் கன்ரீன் அடியில் என்று கூறினார் அப்போது யார் களவு எடுத்தது என்று கேட்க 11யில் உள்ள டிரோஜன் என்று கூறினார். எவ்வளவு பணம் என்று கேட்க ரூ50 என்று சொன்னான். அவ்வேளையில் தரம் 10பி இன் பகுதித் தலைவரும் அவ்விடத்தில் நின்றார். அதன் பின்னர் நான் யசோதரனை அழைத்துச்சென்று அவரது வகுப்பில் விட்டு விட்டு நான் தரம் 11 பகுதியின் தரம் 11 யில் கல்வி கற்கும் டிரோஜன் என்பவரை நேரடியாக பார்த்து " நீ ஏன் காசு களவு எடுத்தாய் " எனக் கேட்டேன் "எனக்கு 10B யில் உள்ள யசோதரனைத் தெரியும் நான் அவரிடம் காசு கேட்டேன்" என்று டிரோஜன் கூறினார். கடனாகக் கேட்டதாகக் கூறினார். அதற்கு நான் கூறினேன் "நீ பொய் சொல்கிறாய் கன்ரீனுக்கு கொண்டு போன காசை யசோதரனின் காசை நீ அவனது அனுமதி இல்லாமல் களவு எடுத்து உள்ளாய்" எனக் கூறினேன். அந்த நேரம் 11B யில் ஏனைய சில மாணவர்களும் இருந்தனர். அப்போது டிரோயனுக்கு சொன்னேன் "ஏன் நீ பிச்சை எடுக்கிறாய், எடுப்பதாயின் உன் வகுப்பிலேயே எடு, ஏன் கீழ் வகுப்பில் சென்று எடுக்கிறாய்" என்று அந்த மாணவனை பேசினேன். அத்துடன் உடனடியாக அந்தக்காசை யாரிடம் எடுத்தானோ அவரிடம் கொடுத்துவிடு என்று கூறினேன். உடனே டிரோஜன் காசைக் கொடுப்பதாக சொல்லிச் சென்றார். பின்னர் நான் டிரோஜன் எடுத்த காசை யசோதனனிடம் கொடுத்து விட்டாரா என பார்ப்பதற்காக 10B யில் உள்ள யசோதனின் வகுப்பிற்கு சென்றேன். யசோதனைக் காசு தந்து விட்டாரா எனக் கேட்டேன். யசோதன் சொன்னார் "காசு தரவில்லை , பக்கத்தில் உள்ள 10 வகுப்பிற்கு டிரோஜன் போனான்" என்று சொன்னார். உடனே நான் யசோதனை அழைத்துக் கொண்டு 10 வகுப்பிற்கு சென்றேன். அங்கு சில மாணவர்கள் இருந்தார்கள். அதில் ஒரு மாணவன் அந்த 50 ரூபா காசை வைத்திருந்தார். அந்த மாணவன் இச் சம்பவத்துடன் தொடர்புபடாதவன் அப்போது நான் கேட்டேன் "ஏன் இக் காசை வைத்திருக்கிறாய்" அதற்கு அந்த மாணவன் சொன்னார் "11 பியில் உள்ள டிரோஜன் அண்ணா பக்கத்து வகுப்பில் கொடுக்கச் சொன்னார்." என்று அந்த மாணவன் கூறினான். அப்போது நான் அந்த மாணவனிடம் சொன்னேன்." காசை டிரோஜன் இடம் திருப்பி கொடுத்து விட்டு , அவனே வந்து இந்தக்காசை யசோதனிடம் கொடுக்கச் சொல்" என்று கூறினேன். உடனே அந்த மாணவன் டிரோஜனைத் தேடிப்போய்விட்டார். அது 5ம் பாடவேளை நேரம் ஆகும். அப்போது நான் யசோதனிடம் கேட்டேன், ஏன் உன்னிடம் தரவேண்டிய காசை 10B யில் கொடுத்து இருக்கின்றான் எனக் கேட்டேன். அப்போது யசோதன் கூறினான். இதில் 10B யில் உள்ள இலக்கியன் சம்பந்தப்பட்டு உள்ளார். இலக்கியன் தான் எனது கையை பின்னுக்கு பிடித்து கொண்டு நிற்க டிரோஜன் தனது காற்சட்டை பையிலிருந்து காசை எடுத்தான்" என்று கூறினான். அப்போது தான் எனக்கு தெரியும் இலக்கியன் என்பர் டிரோஜன் காசு எடுப்பதற்கு உதவியுள்ளார் என்று. அதுவரை இலக்கியன் இச்சம்பவத்தில் உள்ளாரென தெரியாது. அப்போது நான் எங்கே இலக்கியன் என்று மாணவர்கள் சொன்னார்கள் ground இல் உள்ளார் என்று நான் உடனே கூட்டி வருமாறு கூறினேன் உடனே மாணவர்கள் இலக்கியனைக்

கூட்டிகொண்டு வந்தார்கள். உடனே நான் அவரை 10ஆம் வகுப்பிற்கு கூட்டிச் சென்று நான் உன்னில் நல்ல மதிப்பு வைத்திருந்தேன் ஆனால் உனக்கு நிரோஜன் உடன் என்ன தொடர்பு என்று கேட்டேன். டிரோஜன் என்பவர் ஏற்கனவே பல பொருத்தமில்லாத செயற்பாடுகள் பொருட்டு கண்காணிப்பில் உள்ள ஒரு மாணவர் அல்லவா என இலக்கியனிடம் கூறினேன். உடனே இலக்கியன் கூறினான் யசோரன் பஸ்கு காசு கேட்டவர் நான் காசு கொடுக்கிறேன் என்று 50ரூபா வை யசோதரனிடம் இலக்கியன் கொடுக்க எத்தனித்தார். யசோதரன் சொன்னார் என்னை அம்மா ஏற்றிக் கொண்டு வந்து ஏற்றி செல்லுவா நான் பஸ்ஸில் வரவில்லை என கூறினார். நான் இலக்கியனிடம் முழுப் பொய் சொல்கின்றாய் உண்மையைச் சொல்லு என்று கூறினேன். உண்மையை சொல்ல வேண்டும் என்ற நோக்கில் வகுப்பிற்கு வெளியில் இருந்த தடியால் தடியினால் அடித்தேன் நான் அடித்தது இலக்கியனின் பின்பகுதியில் பட்டது. பின்னர் அவரிடம் உண்மையைச் சொல்லு இல்லாவிடில் உன் அம்மா, அப்பாவிடம் கூறுவேன் நீ காசு எடுப்பதற்கு உடந்தையாக இருந்தாய் என்றும் டிரோஜன் உடன் என்ன தொடர்பு உள்ளது எனவும் அப்பா அம்மாவிடம் சொல்லுவேன் என கூறினேன் அதன் பின்னர் இலக்கியன் பிழையை ஒப்புக்கொண்டு "மன்னித்துக் கொள்ளுங்கோ சேர்! நான் யசோதரனின் கையைப் பிடிக்க டிரோஜன் யசோதரனின் காசை எடுத்தான்" என உண்மையை ஒத்துக் கொண்டான். நான் ஒரு தடவை மாத்திரம் தான் அடித்தேன் அதுவும் மேசையில் பட்டுத்தான் அவனில் பட்டது. பின்னர் நான் கூறினேன் நடந்த விடயங்களை எல்லாம் நீங்கள் இருவரும் கடிதமாக எழுதி தரவேண்டும் என்று பாடசாலையில் உள்ள வைரவர் கோயிலில் வைத்து எழுதுமாறும் கூறி விட்டு நான் ஒழுக்காற்று சபை கூட்டத்திற்கு சென்று விட்டேன். நான் கூட்டம் முடிந்து வரும்போது இருவரும் கோவிலில் கடிதத்துடன் நின்றனர். யசோதரன் சரியாக கடிதம் எழுதி வைத்திருந்தார். இலக்கியன் முகவரி திகதி எதுவும் போடாமல் கடிதம் எழுதி வைத்திருந்தார். உடனே நான் சொன்னேன் திகதி முகவரி எல்லாம் போட்டு சரியாக திருப்பி எழுதவும் என்று கூறினேன். பின்னர் இலக்கியன் இரண்டாவது கடிதம் எழுதினார். அதில் "பணத்தை சிறிது நேரத்தில் கொடுத்து விட்டேன்" என்று பொய்யாக எழுதியிருந்தார் நான் கேட்டேன் நான் விசாரிக்கும் மட்டும் நீ காத்திருந்தாய் ஏன் பொய் சொல்லுகிறாய் எனக் கேட்டு மூன்றாவது தடவை கடிதம் எழுதச் சொன்னேன் பின்னர் மூன்றாவது தடவை சரியாக மன்னிப்பு கேட்டு இனி அத்தவறை செய்யமாட்டேன். என எழுதி இருந்தார் பின்னர் இலக்கியன் எனது காலில் விழுந்து இனிமேல் தவறு செய்யமாட்டேன் எனக்கூறி மன்னிப்பு கேட்டார். நான் கூறினேன் "நீ நல்ல பிள்ளை ஆனால் ஏற்கனவே கண்காணிப்பில் உள்ள டிரோஜனுடன் ஏன் இவ்வாறான தொடர்பு வைத்திருந்தாய்"? எனவே நான் உன் பெற்றோருக்கு அறிவிப்பேன் என கூறினேன் அவனும் அழுது கொண்டே இருந்தான் நான் இவ்விடயத்தை பெற்றோரிடம் கூறுவேன் என சொல்லிவிட்டு அவனை வகுப்பறைக்கு அனுப்பி விட்டேன் குறித்த மாணவனை தண்டிக்க வேண்டும் என்ற நோக்கம் எனக்கு இருக்கவில்லை இவ்வாறு காசு எடுத்து பழகுவது தவறான வழிக்கு அவரை இட்டுச் செல்வதில் இருந்து தடுக்க வேண்டும் என்ற நோக்கிலேயே நான் அவனை இவ்வாறு கண்டித்தேன் பின்னர் நான் தரம் 10 பகுதி தலைவருடன் கலந்துரையாடி குறித்த மாணவனின் காசு கிடைத்துவிட்டதா?

என்பதையும் உறுதிப்படுத்திக்கொண்டு அவர் அதற்கு காசு கொடுக்கப்பட்டு விட்டது என்று சொன்னார் இம்மூன்று மாணவர்களின் பெற்றோரை அழைத்து இச் சம்பவங்கள் தொடர்பான விளக்கங்களை கூற வேண்டும் என்று நாம் இருவரும் தீர்மானித்தோம் அதன் பின்னர் நான் எமது பாடசாலையின் பளுதூக்கும் பயிற்றுவிப்பாளர் இன் மரணச் சடங்கில் கலந்து கொள்வதற்காக பாடசாலை முடிந்ததும் வெளியேறினேன் போதைவஸ்து தொடர்பாக மாணவர்களின் நலனில் கவனம் செலுத்துதல் தொடர்பாக கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்திற்கு அமைய நான் ஒழுக்காற்று குழு உறுப்பினர் என்ற அடிப்படையில் மாணவனின் உடல் உள பாதுகாப்பு மற்றும் பாடசாலையின் கௌரவம் பாதுகாக்கும் நோக்குடன் மாணவர்களின் செயற்பாடுகள் ஒவ்வொன்றையும் கூர்ந்து கவனித்து தவறு இடம்பெறாமல் தடுப்பதற்கும் அதனை தவிர்ப்பதற்கும் செயற்பட்டு மாணவனின் எதிர்கால நலன் கருதியே அவரை வழிப்படுத்த முயற்சித்தேன் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இரண்டாம் பிரதிவாதி திரு. கு. சசிதரன் (பகுதித் தலைவர்)**

18.11.2022 அன்று வெள்ளிக்கிழமை 10.55 மணி அளவில் 10B வகுப்பைச் சேர்ந்த யசோதரன் எனும் மாணவன் 11ஆம் வகுப்பை சேர்ந்த ஒரு மாணவன் தனது காசை பறித்ததாக என்னிடம் வந்து அதிபருடைய அலுவலகத்திற்கு முன்னால் கூறினர். நான் அவரைக் கூட்டிக்கொண்டு 11ஆம் ஆண்டுக்கு பொறுப்பான sectional head விபுலன் அவர்களிடம் கொண்டு சென்று ஒப்படைத்து விடயத்தை கூறினேன். அதன் பிறகு 10A வகுப்பிற்கு PT பாடம் என்பதனாலும் நானே அதற்கு பொறுப்பு என்பதனாலும் அவர்களைக் கூட்டிக்கொண்டு கிரவுண்டில் கொண்டு போய் விட்டேன். அந்த வகுப்பு மொனிட்டர் கூறினார் சேர் கிரவுண்டுக்கு வராமல் “கொஞ்சப்பேர் நிக்கினம்” என்று நான் அவர்களை அழைப்பதற்காக வகுப்பிற்கு சென்றேன். நான் வகுப்பை நோக்கி சென்றபோது விபுலன் அவர்கள் ஒரு சிறு தடி ஒன்றினை எடுத்துக்கொண்டு வகுப்பறையின் உள் நுழைவதை பார்த்தேன். அப்போது அடித்த சத்தம் கேட்டது வகுப்பறைக்குள் நான் நிற்கவில்லை. அதனால் நான் அடித்ததை பார்க்கவில்லை. ஆனால் சப்தம் மட்டும் கேட்டது. நான் வகுப்பறைக்குள் நுழைய முன்னமே விபுலன் அவர்கள் மாணவன் இலக்கியனை கூட்டிக்கொண்டு வெளியில் வந்த போதே நான் பார்த்துவிட்டு என்ன என்று கேட்டேன். விபுலன் கூறினார் இலக்கியன் என்னும் மாணவன் யசோதரன் எனும் மாணவனை பின்பக்கமாக இரண்டு கைகளையும் பிடித்து வைத்திருக்கவே 11ஆம் ஆண்டு மாணவன் காசை எடுத்து சென்றதாக கூறினார். பின்னர் அவர்கள் மாணவர்களிடம் நடந்தவற்றை கடிதம் மூலம் எழுதித் தருமாறு கூறினார். அதன் பிறகு நான் அந்த இடத்தை விட்டுச் சென்று விட்டேன். அதன்பிற்கு பாடசாலை முடிந்து நான் வீட்டுக்கு சென்றதன் பின்னர், பிற்பகல் 4 மணி அளவிலேயே எனக்கு விபுலன் அவர்கள் மாணவன் இலக்கியனின் தந்தை அதிபருக்கு அழைப்பு விடுத்ததாகவும் அதிபர் எதுவும் நடவடிக்கை எடுக்காமையால் தான் வைத்தியசாலைக்கு மகனை கூட்டிச் செல்வதாகவும் கூறியதாக 10A வகுப்பாசிரியர் மயூரன் அவர்கள் கூறியதாக கூறினார். நான் அதிபரிடம் அழைப்பு எடுத்து கேட்டபோது சம்பவம் தெரியும் எனவும் தான் கதைப்பதாகவும் கூறினார். நானும்

அதனோடு போனை வைத்து விட்டேன். அடுத்த நாள் அதாவது 19.11.2022 தினமன்று வைத்தியசாலையில் பிற்பகல் 12 மணியளவில் நானும் உப அதிபரும் சென்று மாணவனை பார்த்துவிட்டு வந்தோம். மேலும் சம்பவ தினமன்று இலக்கியன் பயந்து இருந்தமையால் நான் எதுவும் அவனிடம் விசாரிக்கவில்லை. நீங்கள் விளையாட்டாக செய்தது சிலவேளை பிரச்சனையாக போகும் என ஆறுதல் கூறி நீ பயப்படாதே நான் இருக்கின்றேன் என இலக்கியனிடம் ஆறுதல் அளித்து விட்டு அனுப்பினேன்.

மூன்றாம் பிரதிவாதி - அதிபர், யா- இந்துக்கல்லூரி

அதிபருடைய அறிக்கையில் 18.11.2022 அன்று வெள்ளிக்கிழமை இடைவேளையின்போது மாணவர்கள் சிற்றுண்டிச் சாலைக்கு சென்றதாகவும் இதன்போது தரம் 10B வகுப்பைச் சேர்ந்த மாணவன் யசோதரன் தரம் 10A வகுப்பைச் சேர்ந்த புவனேந்திரன் இலக்கியன் மற்றும் தரம் 10B வகுப்பைச் சேர்ந்த மிதுனன் ஆகியோர் பாடசாலை சிற்றுண்டிச்சாலை சென்றதாகவும் தரம் 10B வகுப்பைச் சேர்ந்த யசோதரன் என்பவரது கையை 10A வகுப்பை சேர்ந்த இலக்கியன் என்பவர் பிடிக்க 11B வகுப்பைச் சேர்ந்த டிரோஜன் என்பவர் யசோதரனின் கால்சட்டை பாக்கெட்டில் இருந்து ஐம்பது ரூபாவினை எடுத்ததாகவும் பணத்தை பறிகொடுத்த மாணவன் பணத்தை திரும்ப திரும்ப கேட்டதாகவும் டிரோஜன் என்பவர் பணத்தை கொடுக்க மறுத்ததாகவும் இதனால் டிரோஜன் என்பவர் தரம் 10 பகுதி தலைவரான சசிதரன் என்பவரிடம் முறையிட்டதாகவும் சசிதரன் அவர்கள் இதை தரம் 11 பகுதி தலைவரான விபுலனிடம் முறையிட்டதாகவும் இதன் அடிப்படையில் விபுலன் என்பவர் தரம்11B மாணவனை கூப்பிட்டு எச்சரித்து பணத்தை கொடுக்குமாறு கூறியுள்ளார் மீண்டும் பணம் செலுத்தப்பட்டதா என உறுதிப்படுத்துவதற்காக தரம்10 வகுப்பிற்கு சென்றதாகவும் இதில் 10A வகுப்பு மாணவன் இலக்கியன் என்பவரும் சம்மந்தப்பட்டது தெரிய வர அவரை கூப்பிட்டு விசாரித்ததாகவும் விசாரணையின்போது இலக்கியன் பஸ் காசு என்று பொய் சொன்னதாகவும் இதனால் அவருடைய ஒழுக்கத்தை உறுதி செய்வதற்காகவும் எச்சரிப்பதற்காகவுமே சிறு தடி ஒன்றினால் காயம் ஏற்படாத வண்ணம் தான் தண்டனை வழங்கியதாகவும் இதனை கடிதம் மூலமாக எழுதித் தருமாறு கூறியதாகவும் மேலும் திங்கட்கிழமை பெற்றோரை கூப்பிட்டு பிரச்சனை தொடர்பில் விளக்கம் அளிக்க தீர்மானித்து இருந்ததாகவும் பின்னர் பகுதித் தலைவர் மரண சடங்கிற்காக சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இச்சம்பவம் தொடர்பில் தனக்கு எழுத்துமூல முறைப்பாடு எதுவும் மாணவர்கள் மூலமாகவோ பெற்றோர்கள் மூலமாகவோ இதுவரை கிடைக்கப் பெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் தற்போதைய சூழலில் மாணவர்கள் இடையேயான போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஆசிரியர்கள் ஈடுபட்டு இருப்பதனாலும் விபுலன் அவர்கள் தரம் 11 பகுதி தலைவராகவும் ஒழுக்காற்றுக் குழு உறுப்பினராகவும் இருப்பதனாலும் கடந்த காலங்களில் தனது கடமைகளை செயலூக்கத்துடன் நேர்த்தியாக செய்து

வந்துள்ளதாகவும் எனினும் இச்சம்பவத்தில் சரீர ரீதியான தண்டனை வழங்கப்பட்டமை சட்டத்திற்கு முரணானதாகவும் மாணவர் நலனுக்கு முரணானதாகும் கண்டறியப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் மாணவனுக்கு அடித்ததை தொடர்ந்து பின்வந்த பாட வேளைகளில் மாணவன் இலக்கியன் தனது வகுப்பு மாணவர்களுடன் பாடசாலை விளையாட்டு மைதானத்துக்கு சென்று விளையாடி உள்ளதாகவும் திங்கட்கிழமை அன்று பாடசாலைக்கு வந்து சகஜமாக கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார் என்பதையும் தெரிவித்துள்ளார். இரு பகுதி தலைவர்களையும் பாடசாலை மட்டத்தில் விசாரணைக்கு உட்படுத்துவதற்காக பாடசாலை மட்டத்தில் குழு ஒன்று நியமிக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டதாகவும் அதன் பிரகாரம் குறித்த பகுதித் தலைவருக்கு மாணவர்களுக்கு எந்த காரணத்திற்காகவும் சரீர தண்டனை வழங்கக்கூடாது என எச்சரிக்கப் பட்டதாகவும் குறித்த விடயம் நீதிமன்ற நடவடிக்கைகளில் இருப்பதன் காரணமாக பாதிக்கப்பட்ட மாணவனை எச் சந்தர்ப்பத்திலும் நேரடியாக விசாரிக்கவில்லை எனவும் நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவுற்ற பின்னர் அதன் பிரகாரம் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவதானிப்பு

முறைப்பாட்டாளரின் மகனாகிய புவனேந்திரன் இலக்கியன் என்பவர் யாழ்பாணம் இந்து வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவன் எனவும். 2022.11.18 தினமன்று பாடசாலையில் பணம் திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக முறைப்பாட்டாளரின் மகனான புவனேந்திரன் இலக்கியன் என்பவரும் தொடர்புடையதாக 1வது பிரதிவாதியான யாழ்பாண இந்து வித்தியாலயத்தின் தரம்11 பகுதித்தலைவனாக திரு. விபுலனுடன் வேறொரு மாணவன் வழங்கிய தகவலின் அடிப்படையில் முறைப்பாட்டாளரின் மகனான புவனேந்திர இலக்கியனிடம் விசாரித்துள்ளதாகவும் பின்னர் திரு. விபுலனால் அவருக்கு தாக்குதல் இடம்பெற்றுள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

அவ்வேளையில் முறைப்பாட்டாளரின் மகனான புவனேந்திரன் இலக்கியனுக்கு 1ஆம் பிரதிவாதியினால் தடியொன்றினால் தாக்குதல் நடாத்தியுள்ளதாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அதே வேளை 1ஆம் பிரதிவாதியினால் புவனேந்திரன் இலக்கியன் எனும் மாணவனுக்கு தடியினால் தாக்கியுள்ளதாகவும் அது அம்மாணவனது பின்புறம் பட்டதாகவும் தெரிவித்துள்ளதால் முறைப்பாட்டாளரின் மகனான புவனேந்திரன் இலக்கியன் என்பவருக்கு 1ஆம் பிரதிவாதியான விபுலன் என்வரால் தாக்குதல் இடம்பெற்றுள்ளமை உறுதியாகின்றது.

முறைப்பாட்டாளரினால் தனது மகனான புவனேந்திரா இலக்கியன் என்பவர் 1வது பிரதிவாதியால் தாக்கப்பட்டமை அறிந்ததை அடுத்து தனது மகனை 2022.11.18 ஆம் தினமன்று மு.ப. 03.15 இற்கு யாழப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்ததையும் 2022.11.19 ஆம் திகதி பி.ப. 08.45 அவர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றதையும் அவதானிக்க முடியும்.

புவனந்திரா இலக்கியன் என்பவருக்கு 2022 தினமன்று யாழ்ப்பாணப் போதனா வைத்தியாலையில் வெளியிடப்பட்ட சட்ட வைத்திய அறிக்கையின்படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள தீவிரமில்லாத காயங்கள் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

1. Swelling of the right side forehead.
2. Tenderness on the left side back of the upper arm

மேலே குறிப்பிடப்பட்டுள்ள 1ஆம் 2ஆம் இலக்க முடைய காயங்கள் கூர்மையில்லாத ஆயுதமொன்றால் ஏற்படுத்தப்பட்டுள்ள காயங்கள் எனவும், இந்த தாக்குதலால் புவனேந்திரன் இலக்கியன் என்பவர் உள ரீதியாக பாதிப்புற்றுள்ளதாகவும் சட்ட வைத்திய அறிக்கையில் சட்ட வைத்திய அதிகாரியால் குறிப்பிடப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

முறைப்பாட்டாளரின் மகனான புவனேந்திரா இலக்கியன் என்வர் குறிப்பிட்ட சம்பவம் நடைபெறும் காலவரையரையில் யாழ்ப்பாணம் இந்து வித்தியாலயத்தில் 10ஆம் வகுப்பில் கல்வி கற்றுள்ளார். அவருக்கு முதலாம் பிரதிவாயான திரு. விபுலன் தரம் 10 வகுப்பரையினுள்ளே தாக்குதல் நடாத்தியுள்ளார். அவ்வகுப்பரையினுள் தாக்குதல் இடம்பெறும் சத்தம் கேட்டபோதும் அது தொடர்பாக 2ஆம் பிரதிவாதியான தரம் 10 இன் வகுப்பத் தலைவர் மு. சசிதரன் எந்தவொரு தலையீடும் செலுத்தாமையானது முறைப்பாட்டாளரின் மற்றும் 2ஆம் பிரதிவாதியின் வாக்கு மூலங்கள் மூலமாக அவதானிக்க முடிகிறது.

மேலும் 3ஆம் பிரதிவாதியான அதிபர் குறித்த சம்பவம் நடைபெறும் வேளையில் அவ்விடத்தின் அண்மையில் பயணித்ததாகவும் அச்சந்தர்ப்பத்தில் ஒரு மாணவர் மூலமாக முறைப்பாட்டாளரின் மகனான புவனேந்திரன் இலக்கியன் என்பவர் திரு. விபுலனால் தாக்கப்படுவதாக கூறப்பட்டதாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் 3ஆம் பிரதிவாதியினால் அச்சந்தர்ப்பத்தில் எவ்வித விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்பதை காண முடிகிறது. பின்னர் 3ஆம் பிரதிவாதியினால் இரு பகுதித்தலைவர்களையும் பாடசாலை மட்டத்தில் கண்காணிப்புக்கு உட்படுத்த குழுவொன்று நியமித்து பரிசோதனைக்கு உட்படுத்தியாதவும். அதன்படி குறித்த பகுதித்தலைவனுக்கு எந்தவொரு காரணத்தைக்கொண்டும் உடல் ரீதியாக மாணவருக்கு தண்டனை வழங்க கூடாதென எச்சரித்துள்ளமையையும் அவதானிக்க முடிகிறது.

முடிவுரை

மேலே குறிப்பிடப்பட்ட சகல விடயங்களையும் மொத்தமாக கவனத்தில் கொள்ளுடமிடத்து 1வது பிரதிவாதியால் பாதிக்கப்பட்ட புவனேந்திரன் இலக்கியன் என்பவருக்கு தாக்குதலுக்கு உள்ளானமை ஒப்புக்கொள்ளப்பட்டதாலும் சட்ட வைத்திய அறிக்கையின் படி இந்த சம்பவத்தினால் மேலே குறிப்பிட்ட புவனேந்திரன் இலக்கியன் என்பவர் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளமை உறுதியாவதனால் இலங்கையின் 1978 இரண்டாம் குடியரசு யாப்பில் இரண்டாம் அத்தியாயமான 11வது உறுப்பரையில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள ஆளொருவர் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தலாகாது என்ற அடிப்படை உரிமையானது, 1வது பிரதிவாதியினால், முறைப்பாட்டாளரின் மகனான மேல் பெயர் குறிப்பிடப்பட்ட புவநேந்திரன் இலக்கியன் என்பவருக்கு உரிமை மீறப்பட்டுள்ளதாக இதனால் முடிவாகின்றது. மேலும் இரண்டாவது பிரதிவாதியான தி, கே. சசிதரன் என்பவரும் 3வது பிரதிவாதியான அதிபரும் பொறுத்தமான கண்காணிப்பு பொறுப்பில் செயற்படவில்லை என்பது இவ்விடத்தில் முடிவாகின்றது.

பரிந்துரை

01. இச்சம்பவம் தொடர்பாக **1ஆம் பிரதிவாதிக்கு** எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

02. இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக மேற்பார்வை பொறுப்புடைமையுடன் செயற்படாமைக்காக **3ஆம் பிரதிவாதிக்கு** எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

27.12..2024 ஆம் திகதிக்கு முன்னர் மேற்குறிப்பிடப்பட்ட பரிந்துரையை நிறைவேற்றியது தொடர்பான அறிக்கையை ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறுமாறு 1996ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 15(2) ஆம் உறுப்பரையின் பிரகாரம் பிரதிவாதிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

அவ்வாறு இப்பரிந்துரையை பிரதிவாதிகளினால் நிறைவேற்றப்பட்டமை அல்லது நிறைவேற்றப்படாமை தொடர்பாக முறைப்பாட்டாளர் மூலமும் மேலே குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வார காலத்திற்குள் ஆணைக்குழுவிற்கு அறியத்தரவேண்டியுள்ளதோடு, அக்காலத்திற்குள் குறிப்பிட்ட அறிவித்தலை அறிவித்திருக்கவில்லையாயின் பிறகு

முன்வைக்கப்படும் வேண்டுகோள் தொடர்பில் கருத்திற் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது என்பதுபற்றியும் அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

தவிசாளர் - ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

Justice L.T.B.Dehideniya
Judge of the Supreme Court (Retired)
Chairman
Human Rights Commission of Sri Lanka

ஆணையாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

Senior Counsel
Commissioner
Human Rights Commission of Sri Lanka

பிரதி :

01. அமைச்சர் - கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை. - (தகவலுக்காக)

02. செயலாளர் - கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை - ( பரிந்துரையை நிறைவேற்றல்)